# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2048 ● ஜுலை 8, 2017 Weekly E-paper ● July 8, 2017


# செம்மொழி மையத்தைச் சிதைப்பதா?

**சுப. வீரபாண்டியன்**

ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுப் போராட்டத்திற்குப் பின் தலைவர் கலைஞர் அவர்கள் தமிழக முதலமைச்சராக இருந்தபோது, 2004 அக்டோபர் 12 ஆம் நாள் அன்று, தமிழ் செம்மொழி என்று மத்திய அரசினால் அறிவிக்கப்பட்டது(அரசாணை எண்: IV-14014/7/2004-NI-II dated 12.10.2004).

அதற்குப் பின்பும் போராடிப் போராடித்தான், அந்நிறுவனத்தை இங்கு செழுமையாக்க முடிந்தது. மத்திய அரசிடமிருந்து போதிய நிதியைப் பெற முடியவில்லை. மைசூரிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்ட செம்மொழி நிறுவனம் இன்றும் வாடகைக் கட்டிடத்தில்தான் இயங்குகிறது. கலைஞர் அவர்களின் முயற்சியால் பெரும்பாக்கம் என்னும் இடத்தில் 17 ஏக்கர் நிலம் அதற்கென வாங்கப்பட்டும். இன்னும் அங்கு கட்டிடம் எழுப்பப்படவில்லை.




ஜெயலலிதா 2011இல் ஆட்சிக்கு வந்தது முதலே, அந்நிறுவனம் புறக்கணிக்கப் பட்டதுடன், செம்மொழி என்ற சொல்லே அரசின் வெறுப்புக்கு உள்ளான சொல்லாக ஆகிவிட்டது. 2013இல் செம்மொழி என்று அறிவிக்கப்பட்ட மலையாளம் இன்று கேரளாவில் பெற்றுள்ள நிதி உதவிகளைக் கூட நம் தமிழ் பெறவில்லை.

இந்நிலையில், சென்னையில் இயங்கிவரும் செம்மொழி நிறுவனத்தையே, திருவாரூர் மத்திய பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதியாக மாற்ற மத்திய அரசு முயற்சிகளை மேற்கொண்டுவரும் தகவல்கள் இப்போது வெளியாகியுள்ளன. இதன்மூலம் செம்மொழி நிறுவனம் தன் தனித்தன்மையை இழந்து, மத்தியப் பல்கலைக் கழகத்தின் தயவில் உயிர் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும். அதற்குப் பின் மத்திய அரசிடமிருந்து நேரடியாக எந்த நிதியையும் பெற முடியாது.

இந்தி, சமற்கிருதம் ஆகிய இரு மொழிகளுக்கு மட்டுமே முன்னுரிமை, பிற இந்திய மொழிகள் அனைத்தும் இரண்டாந்தர மொழிகள் என்பதுபோல் மத்திய அரசு நடந்து கொள்கிறது. அதிலும் தமிழ், தமிழினம் என்றாலே பாஜகவிற்கு வெறுப்பாக உள்ளது. அதன் தொடர்ச்சியாகவே இந்தச் செயலையும் நாம் பார்க்க வேண்டியுள்ளது.

தமிழைச் செம்மொழியாக மத்திய அரசு அறிவித்ததற்கு முன்னால், அதற்காக நாம் நெடிய போராட்டத்தை நடத்தியுள்ளோம்.

1856 ஆம் ஆண்டு அறிஞர் கால்டுவெல், "திராவிட மொழிகள் அனைத்திலும் உயர்தனிச் செம்மொழியாய் நிலைபெற்று விளங்கும் தமிழ்...." என்று தன் நூலில் குறித்தார். 19ஆம் நூற்றாண்டு இறுதியில் பரிதிமாற்கலைஞர் தமிழைத் செம்மொழியாக்க வேண்டும் என்னும் கோரிக்கையை முன்வைத்தார். 1918 மார்ச் மாதம், சென்னை. பச்சையப்பன் கல்லூரியில் மாநாடு கூட்டி, சைவ சித்தாந்த மகா சமாஜம் அதனை ஒரு தீர்மானமாகவே நிறைவேற்றியது.

அன்று தொடங்கி, பல்வேறு தமிழ் அமைப்புகள் அந்தக் கோரிக்கையை முன்வைத்துப் பல மாநாடுகளையும், போராட்டங்களையும் நடத்தின. 1996 ஆம் ஆண்டு, சென்ன, தஞ்சை, திருச்சி, நெல்லைப் பல்கலைக்கழகங்கள் இத்தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பின.

அன்று இந்திய பிரதமராக இருந்த வாஜ்பாய் அவர்களிடம், தமிழக முதல்வர் கலைஞர் இதனை வலியுறுத்தினார். இத்தனைக்கும் பிறகே, 2004 ஆம் ஆண்டு தமிழ் செம்மொழி என்று அறிவிக்கப்பட்டது.

இப்போது அந்நிலையை மாற்றத் தமிழர்கள் விரோத அரசான மத்திய மோடி அரசு முயற்சி செய்கின்றது. இதனை நாம் முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். கட்சி எல்லைகளைத் தாண்டி அனைவரும் ஒன்றுபட்டு இந்த அவலத்தை எதிர்த்திட வேண்டும்.

இந்துத்துவாவும், தமிழ் உணர்வும் எதிர் எதிர் நிலையில் மத்திய அரசினால் கட்டமைக்கப் பட்டுக் கொண்டு உள்ளன.

இறுதியில் தமிழே வெல்லும் என்பதைத் தமிழகம் உணர்த்தட்டும்!

●

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keertru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## எழுத்தாளர் மதிமாறனுக்கு மாபெரும் வரவேற்பு



**ம**லேசியாவின் கோலாலம்பூரில் 'உலகத் தமிழ் உணர்வாளர் ஒருங்கிணைப்பு மாநாடு' 24.06.2017 அன்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட வே.மதிமாறன் ஜூலை 6 காலை சென்னை திரும்பினார். சென்னை வந்தடைந்த அவரை, திராவிடர் கழகம், திராவிட இயக்கத் தமிழர் பேரவை, திராவிடர் விடுதலைக் கழகம், தந்தை பெரியார் திராவிடர் கழகம், மனிதநேய மக்கள் கட்சி மற்றும் சிறுபான்மையினர் பிரிவைச் சேர்ந்த சுமார் 300 பேர் வரவேற்றனர்.

கடந்த 10 தினங்களுக்கு முன்பு நடைபெற்ற தொலைக்காட்சி விவாதத்தை ஒட்டி நாராயணன், எஸ்.வி.சேகர் ஆகியோர் திராவிடத்திற்கு எதிராகவும், வே.மதிமாறனுக்கு எதிராகவும் குரல் எழுப்பினர். இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் வே.மதிமாறனுக்குப் பக்க பலமாக இருப்பதை காட்ட இந்த வரவேற்பு கொடுக்கப்பட்டது. திராவிட இயக்க தமிழர் பேரவையின் சுப.வீரபாண்டியன் மற்றும் திராவிடர் கழகத்தில் இருந்து மாநில, மாவட்ட நிர்வாகிகள். பல்வேறு இயக்கத்தினர் கலந்து கொண்டனர்.

நன்றி : **நக்கீரன்**

## தி.மு.கழகப் பொதுக்கூட்டம்




03-07-2017 அன்று சென்னை ஆர்.கே.நகர் பகுதியில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்கூட்டத்தில் தோழர் சுபவீ மற்றும் திமுக முன்னணியினர்.

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்



## புறக்கடைச் சர்வாதிகாரம்

**வ**ஜ்ஜியர்கள் வலிமையானவர்கள். அவர்களின் சன்ஸ்தகார் சங்கம் வலிமையுடையது. அவர்களை அழிக்க மன்னன் அஜாத சத்ருவால் முடியவில்லை. புத்தரிடம் மண்டியிட்டார்.

விளைவு அஜாதசத்ரு பவுத்தனாக மாறினான். இது இந்தியாவின் தொடக்ககால வரலாறு. இன்றைய வரலாறு வேறு.

மூர்க்கனான அஜாதசத்ருவால் மக்களின் மன்னாக முடிந்தது. ஆனால் ஆர்.எஸ்.எஸ். மோடியால் மக்கள் விரோத சர்வாதிகாரியாக இருக்க மட்டுமே முடிந்தது.

பா.ஜ.க. ஆட்சி நுழைய முடியாத மாநிலங்களை அளிக்க முயல்கிறது மோடி அரசு.

டெல்லியில் கேஜ்ரிவாலுக்கு எதிராக வாலாட்ட முடியாத மோடி, கவர்னர் மூலம் அங்கே அராஜகத்தை முன்னேடுத்தார்.

மேற்கு வங்கத்தில் முதல்வர் மம்தாபேனர்ஜியை தெலைபேசி மூலம் மிரட்டி, அவமானப்படுத்தி மாநில அரசை நிலைகுலையச் செய்ய ஆளுநர் திரிபாதி முயன்றார். இதற்கு ஆளுநர் அழித்த விளக்கம் பிசுபிசுத்துப் போனது.

மேற்கு வங்கத்தில் ஆளுநர் ஆட்சி வரவேண்டும் என கூப்பாடு போடுகிறது பா.ஜ.க.

அதுபோல புதுவை யூனியன் பிரதேசத்திலும் பா.ஜ.க.வின் வால் நீளத்தொடங்கிவிட்டது.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சியின் பா.ஜ.க. தன் கையாளான அன்னா அசாரேயை வைத்து லோக்பால் - லோக்பால் என்ற ஒரு போராட்டத்தைப் பின் நின்று நடத்தியது.

அப்போது அங்கே கூப்பாடு போட்டு தேசிய கொடி ஆட்டிக்கொண்டு இருந்தவர் கிரண் பேடி. பா.ஜ.க.வின் அந்த ‘அசைன்மெண்டுக்காக’ கிரண் பேடிக்குக் கிடைத்தது புதுவை ஆளுநர் பதவி.

புதுவையின் முதல்வர் நாராயண சாமி தலைமையிலான காங்கிரஸ் அரசை நிலை குலையச் செய்ய, அரசு நிர்வாகத்தில் தலையிட்டுக் குழப்பத்தை ஏற்படுத்தத் தொடங்கினார் கிரண்பேடி.

எப்படியும் புதுவையில் கொல்லைப்புறம் வழியாகவாவது நுழைந்து விட வேண்டும் என்று துடிக்கிறது பா.ஜ.க.

சட்ட மன்றத்தில் நுழைய வாய்ப்பில்லாத சமுகங்களுக்கான மூன்று சட்டமன்ற உறுப்பினர் பதவிகளை, சட்டத்துக்குப் புறம்பாக மாநில அரசின் பரிந்துரையில்லாமல், மத்திய அரசின் மூலம் மூன்று பா.ஜ.க.வினரை நியமித்தார் கிரண்பேடி.

அதுவும், பேரவைத் தலைவர் செய்ய வேண்டிய பதவிப் பிரமாணத்தை தானே ரகசியமாகச் செய்து முடித்திருக்கிறார், முதல்வரும், பேரவைத் தலைவரும் இல்லாமல்.

இது அப்பட்டமான பா.ஜ.க.வின் சட்ட விரோதச் செயல்.


ஐ.பி.எஸ். அதிகாரியான கிரண்பேடி பிரதமர் மோடியின் சர்வாதிகாரக் கைப்பாவை.

தமிழகத்தில் பா.ஜ.க. ஒரு கிள்ளுக்கீரை.

ஆனாலும் மோடி அரசுக்கு எதிரான வலிமையான எதிர் அணியும், போராட்டமும் உருவாகவில்லை என்றால் - நாளைய இந்தியா கேள்விக்குறியாகி விடும்.

# பா.ஜ.க.வின் குறுக்குப்புத்தித் தந்திரம்

எழில்.இளங்கோவன்




நடிகர் ரஜினி காந்த் அரசியலுக்கு வருவாரா? மாட்டாரா?

இது அவருக்கே தெரியாத ‘பிரம்ம ரகசியம்’. அவரின் ரசிகர்களைக் குழப்பும் ‘இராஜரகசியம்’.

“நான் பச்சைத் தமிழன்” என்பார்.

“என்னைத் தூக்கி வீசினால் நான் இமய மலையில்தான் விழுவேன்” என்பார்.

எதற்காக இவர் அங்கே போய் விழவேண்டும். ‘பச்சைத் தமிழனுக்கு’ இமயமலையில் என்ன வேலை?

அங்கே சுகோரிகளும், கஞ்சா பேர்வழிகளும் திரிவதாகக் கேள்வி.

இது போன்ற நதி மூலங்களையும், ரிஷி மூலங்களையும் தேடிக்கொண்டிருப்பது நம் வேலையன்று – விட்டுவிடுவோம்!

★ ★ ★

“தலைவா! நீங்க அரசியலுக்கு வர வேண்டும்! எப்ப வருவீங்க? சொல்லுங்க!” – இது ரசிகர்களின் ஏக்கம்.

“நான் அரசியலுக்கு வந்தா பதவி வாங்கிடலாம். என்னை வச்சு சம்பாதிச்சிடலாம் என்று மட்டும் நினைச்சிடாதீங்க. அதுக்கு நான் விடமாட்டேன்” – இது ரஜினி தந்த ‘ஒரு மாதிரி’ நம்பிக்கை!

“நீங்க எப்ப அரசியலுக்கு வருவீங்கனு சொல்லுங்க தலைவா” – மீண்டும் ரசிகர்கள்.

“ஆண்டவன் சொல்றான், நாம செய்றான்” – பாவம் ரசிகர்கள்.

இது அவர்கள் பிரச்சினை விட்டுவிடுவோம்!

★ ★ ★

ரஜினி அரசியலுக்கு வருவாரா? மாட்டாரா?

“வருவார்; இல்லை வரமாட்டார்” – இது ஊடக விவாதங்கள்.

“வந்தால் வரவேற்போம்” – சில தலைவர்கள்.

“வராமல் இருப்பதே நல்லது” – இன்னும் சில தலைவர்கள்.

ஆனால் ரஜினி மட்டும் வாய் திறக்க மாட்டார். இருந்தாலும் ஊடகங்கள் விட்ட பாடில்லை.

பா.ஜ.க. மட்டும் ரஜினியைத் தொடர்கிறது. சும்மா ‘ஜவ்வு’ மாதிரி இழுஇழு என்று இழுத்துக்கொண்டு இருக்கிறது.

கலைஞரின் ஓய்வும், ஜெயலலிதா மரணமும் தமிழகத்தில் வெற்றிடத்தை ஏற்படுத்திவிட்டதாம். அதனால் ரஜினி அரசியலுக்கு வரவேண்டும் பா.ஜ.க. அவரை அரவணைக்கக் காத்திருக்கிறது என்கிறார் பொன்.ராதாகிருஷ்ணன்.

அப்படி என்ன வெற்றிடம் இங்கே ஏற்பட்டு விட்டது. எந்த விளக்கத்தையும் இதுவரை அந்த கிருஷ்ணன் சொன்னதாகத் தெரியவில்லை.

அதே வெற்றிடத்தைத் தமிழிசை சவுந்தர்ராஜனும் கண்டுபிடித்து விட்டாராம். ரஜினி ஆன்மிக வாதியாம். பா.ஜ.க. கோட்பாடுகளுக்கு அவர் உடன் பட்டவராம். அதனால் ரஜினி அரசியலுக்கு வரவேண்டுமாம். சரிதான்!

இவர்கள் பா.ஜ.க.வின் தமிழக தலைவர்கள்.

அமித்ஷாவும் மோடியும் கூட ரஜினியை வரவேற்கின்றார்கள் என்பது செய்தி. இவர்கள் அகில இந்தியத் தலைவர்கள்.


பா.ஜ.க. இப்படி ஒரு நிலையை எடுத்திருக்கும் வேளையில், அக்கட்சியின் மூத்த தலைவர் என்று சொல்லிக்கொள்ளும் சு.சாமி –

“நடிகர் ரஜினிகாந்திற்கு அரசியல், அடிப்படை உரிமைகள் பற்றி எதுவும் தெரியாது” என்றும், “நடிகர் ரஜினி காந்த் அரசியலுக்கு வரக்கூடாது. அவர் RK 420” என்றும் “அவர் அரசியலுக்கு வந்தால் அவருக்குத் தான் ஆபத்து” என்றும் கூறுகிறார் சு.சாமி.

‘ஆபத்து’ என்று ரஜினிக்கு சு.சாமி விடுக்கும் ‘மிரட்டல்’ எப்படிப் பட்டது என்பதை அவர் விளக்கவில்லை.

நாவடக்கம் இல்லா மனிதர் சு.சாமி என்பது தெரியும் அவரின் கட்சி எடுக்கும் முடிவுக்கு எதிராக அவர் பேசுவது நாவடக்காமையா அல்லது நடிப்பா. தெரியவில்லை.




சாதாரணமாக ஒரு கட்சி எடுக்கும் முடிவுக்கு மாறாக அக்கட்சியின் சாதாரண உறுப்பினர் பேசினாலும் கூட அவர் மீது நடவடிக்கை எடுக்கச் சின்னஞ் சிறிய கட்சிகள் தயங்காது.

இங்கே நாடாளும் பெரிய கட்சியான பா.ஜ.க.வில் சு.சாமி குறுக்குச்சால் ஓட்டுகிறார். இதை பா.ஜ.க. அலட்டிக்கொள்ளாமல் பார்த்துக் கொண்டிருக்கிறது.

மத்திய இணை அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் சு.சாமியின் பேச்சு அவரின் சொந்தக் கருத்து என்று பூசி மெழுகுகிறார்.

ஜெயலலிதா மறைவுக்குப் பின் சசிகலாவை ஒதுக்கியது பா.ஜ.க. ஓ.பன்னீர்செல்வத்தை கையில் எடுத்தது. இப்பொழுது எடப்பாடியும் அதில் மாட்டிக் கொண்டார்.

ஆனால் அ.தி.மு.க. என்றாலே சசிகலா அணி மட்டும்தான் என்று தன் கட்சிக்கு எதிராகவே ஓங்கி அடித்துப் பேசினார் சு.சாமி.

இதுவும் அவரின் தனிப்பட்ட கருத்து என்றார் தமிழிசை.

நடிகர் ரஜினி காந்த் குறித்த பா.ஜ.க.வின் அணுகுமுறையும், சு.சாமியின் அணுகுமுறையும் முரண்பட்டவை இல்லை. எதிர்மறைத் தூண்டல் மூலம் ரஜினியை அரசியலுக்கு இழுக்கப்பார்க்கிறார் சு.சாமி. பா.ஜ.க.வின் ஒரு விசித்திரமான, குறுக்குப்புத்தித் தந்திரம் இது.

‘பாபா’ என்று படுத்துக் கொண்டிருக்கும் ரஜினியை உசுப்பேற்றி அரசியலுக்கு இழுத்து அதன்மூலம் தமிழக ஆட்சியைப் பிடிக்க நினைக்கிறது பா.ஜ.க.

இது அத்தைக்கு மீசை முளைக்கும் கதையாகத்தான் முடியும். ●




## Hello English English மொழி என்பது அறிவன்று.. தொடர்பு கொள்ளும் திறன்..

சிவதி

கருத்துப்பரிமாற்றத்தில் இந்தியாவின் தொடர்பு மொழிகளை இணைத்து, இணைப்புக் கருவியாக செயல்படுவது ஆங்கில மொழி.

ஆங்கிலேயரைப்பார்த்து அச்சப்பட்டுக்கொண்டு இருந்த நாம், அதன் தொடர்ச்சியாக ஆங்கிலத்தைப் பார்த்தும் அச்சப்படுவது தன்னிச்சையாக நிகழ்ந்ததாகத் தெரியவில்லை.

ஆங்கிலத்தின் மீதான அச்சம் விலக அறிவுப்பூர்வமாக மொழியை அணுகுவோம். அதற்குப் பெரும் துணையாக அமைவது இந்தச் செயலி. ஆங்கிலம் கற்க எண்ணற்ற செயலிகள் இணையத்தில் கிடைத்தாலும் இச்செயலி பல்வேறு வடிவங்களில், பல்வேறு அணுகு முறையில் வெகுவாகவே கவருகிறது. அது மட்டுமன்று தமது ஒவ்வோர் அசைவிலும் புதுமையாக செய்கிறது.

பொதுவாக ஒரு மொழி குறித்தான திறன் மேம்பட, வாசித்தல், எழுதுதல், கேட்டல், பேசுதல் என்கிற நான்கு நிலைகளை எட்ட வேண்டும். மிகச்சரியாக இந்த நுணுக்கத்தை அறிந்து அதன் வழியே பயனர்களை இந்தச் செயலி அற்புதமாகக் கையாளுகிறது.

பயனராக பதிவு செய்து கொண்ட பின் நீங்கள் எந்த நிலையில் இருக்கிறீர்கள்? உங்களுக்கு எந்த வகையிலான பாடங்கள் தேவைப்படுமெனப் பயனரை முதலில் நாடிபிடித்துப் பார்த்து நமது நிலையினைத் தெரிவு செய்கிறது. அதன் பின்னர் நாள்தோறும் பயிற்சிதான்.

இதில் பாடதிட்டத்தில் என்ன புதுமையென்றால் நாள்தோறும் வெளியாகும் நாளிதழ் செய்திகளின் அடிப்படையில் புதிய, புதிய சொற்களுக்கு நிகரான ஆங்கிலச்சொற்களை அறிமுகம் செய்து அது எந்த எந்த இடங்களில் சரியாகப் பொருந்துகிறது என்பதையும் விளக்கம் தரும் வழிமுறைகள் அனைத்துப் பயனரையும் கவரும்.

அதிகமாகப் பயன்படுத்தப்படும் 10,000 சொற்களைக்கொண்ட அகர முதலிகள் கொடுக்கப்பட்டுள்ளன. திறன் பேசிகளை கைகளில் எடுத்தாலே விளையாட்டு எண்ணம் வரும் பயனரையும் எளிய சொற்புதிர் விளையாட்டுகள் வழியே ஆங்கிலத்தை எளிமையாகக் கற்பிக்கிறது இந்தச் செயலி.

கற்பித்தலுக்கென பல்வேறு ஒளி, ஒலி வடிவ நகரும் படங்களும், மொழி வல்லுநர்களின் பொழிப்புரையும் இருக்கும் காரணத்தினால் செயலி சிறப்பாக இருக்கிறது. இதன் பொருட்டு 2016 ஆம் ஆண்டு கல்விக்கான மிகச்சிறந்த செயலி என்ற பரிசையும் பெற்றிருக்கிறது.

ஒவ்வொரு பயிற்சியில் இருந்தும் கேட்கும் கேள்விகளுக்கு அளிக்கும் பதில்களுக்குப் பாராட்டுகளும், கைதட்டல் ஒலிகளும் நம்மை அடுத்தடுத்த பாடத்திற்கு ஆர்வத்துடன் அழைத்துச் செல்கின்றன. ஆங்கிலம் கற்க விரும்பும் நம் தோழர்களுக்கு நம்பிக்கையோடு இச்செயலியினை நாம் அறிமுகம் செய்யலாம். தொடர்ந்து இச்செயலியைப் பயன்படுத்தினால் கவனிக்கத்தக்க மாற்றமும் ஏற்றமும் பெறுவது உறுதி

இச்செயலியினைத் தரவிரக்கம் செய்ய இங்கே சொடுக்கவும்

https://play.google.com/store/apps/details?id=com.CultureAlley.japanese.english

## அழகாய் ஆவணப்படுத்தும் Office Lens

நண்பர் நாளிதழ் படிக்கும்போது ஒரு முதன்மைச் செய்தியைக் கவனித்துவிட்டார். அதை அடுத்த நொடியே என்னிடம் பகிர்ந்துவிடவும் விருப்பப்பட்டார். தம் கையில் உள்ள ஆன்ட்ராய்ட் மொபைலை கொண்டு எடுத்தார், படம் பிடித்தார். வாட்ஸ் ஆப் செயலி வழியே பகிர்ந்தும் விட்டார்.

நான் பெற்ற அந்தப்பதிவில் நண்பர் தேநீர் பருகிய வெற்றுக் கோப்பையும் மேசையின் மீது இருந்த அவர் அலுவலக கோப்பும் தெரிந்தது. ஆனால் அவர் எனக்காக அனுப்பிய நாளிதழ் செய்தி மட்டும் எவ்வளவு படிக்க முயன்றும் தெளிவாகவே தெரியவில்லை.

நகைப்புக்காகச் சொல்லவில்லை. பல பேர் வாட்ஸ்அப் வழியே நிழற்படமெடுத்து பகிரவேண்டிய செய்தி, யாருக்குமே பயனில்லாமல் போகிறது. காரணம் நாம் நிழற்படமெடுக்கும்போது சரியாக நிழற்படக்கருவியினை வைத்து எடுக்கத் தவறுவதும் தேவையற்ற பொருட்களையும் சேர்த்து படமெடுப்பதுவாகத் தவறுகள் நேர்கின்றன.

அது போலவே கைகளில் உள்ள பட்டியல் மற்றும் ஆவணங்களைப் பிறருக்கு வழங்கும் போது ஒரு படி எடுத்துக்கொண்டு வழங்க வேண்டும் என நினைப்போம். ஆனால், மறந்து விடுவோம். நினைத்த நேரத்திற்கெல்லாம் நமக்கு ஜெராக்ஸ் இயந்திரம் பக்கத்தில் வந்துவிடுமா என்ன என நினைப்போருக்கு நான் சொல்லும் செய்தி பயனளிக்கும். இது போன்ற நேரத்தில் நமது திறன் பேசியினை நாம் துணைவனாகப் பயன்படுத்தலாம்.

வழக்கம் போல உங்கள் கருவியில் உள்ள PlayStore செல்லுங்கள். அதில் OFFICE LENSE எனத் தட்டச்சு செய்யுங்கள். மைக்ரோ சாப்டின் குறுஞ்செயலி உங்கள் திறன்பேசியில் தரவிறக்கம் செய்து கொள்ளுங்கள். உங்களுக்கு மைக்ரோ சாப்ட் இணையதளத்தில் மின்னஞ்சல் இருக்குமானால் இன்னும் இன்னும் கூட கூடுதல் வசதி கிடைக்கக் கூடும்.

பாதுகாப்பாக வைக்க வேண்டிய ஆவணங்கள் என நினைப்பதையோ அல்லது பகிரவேண்டிய ஆவணங்களையோ இச்செயலி வழியே படம் பிடியுங்கள். ஒரு நாளிதழினைப் படம் பிடிப்பத்தாக இருந்தால், கேமாரா வழியே படம் பிடிக்கும் போதே கட்டம், கட்டமாக பிரித்து காண்பிக்கும். உங்களுக்கு எந்த பத்தி வேண்டுமோ அதை தனியே பிடித்துக் கொள்ளலாம். அது மட்டுமடுமல்ல அழகாக சதுர வடிவிலோ அல்லது செவ்வக வடிவிலோ நாம் அனுப்ப வேண்டிய பகுதியினை வடிவமைக்கலாம். எப்போது நேரம் கிடைக்கிறதோ அதனை மின்னஞ்சல் வழியாகவோ அல்லது பென்ட்டிரைவ் வழியாகவோ அச்சு எடுத்துக்கொள்ளுங்கள்.

படம் பிடித்தவுடன் மேலே White Board என்பதைச் சொடுக்குங்கள். இப்போது நீங்கள் படம் பிடித்த பகுதி நிழலோ, கருப்போ அல்லது வண்ண இடையூறோ இன்றி அழகாகப் படிக்கும் வகையில் அமையும். எடுத்த படத்தை எப்படிச் சேமிக்க வேண்டும் என்பதற்குக் காணொலி உங்களுக்கு உதவும்.

இதன் வழியே நீங்கள் அனுப்பும் ஆவணம் எளிதாகப் படிக்கும் வகையில் இருக்கும். நீங்கள் அனுப்பும் செய்தியினை அவர் பெரிதாக்கிப் பெரிதாக்கி வெகு சிரமப்பட்டுப் படிக்கவேண்டியதில்லை. எந்த ஒரு ஆவணமாக இருந்தாலும் எளிதில் ஸ்கேன் செய்யலாம். ஆங்கிலத்தை ஸ்கேன் செய்தால் அதனை Ms word கரு மாற்றும்போது அப்படியே Text ஆக மாறுகிறது. எனவே எழுத்தினைத் தட்டச்சு செய்யும் நேரம் குறைகிறது. பல்வேறு மேம்பாடுகள் இச்செயலி அடையவுள்ளதால் விரைவில் தமிழுக்கும் இது வரும் என நம்பலாம்.

நீங்கள் படம் பிடித்த பகுதியினை MS Word, PDF, One Note, Power Point என எளிதில் மாற்றலாம். அது மட்டுமல்ல அந்த பகுதியினை ட்விட்டர், வாட்ஸ்ஆப், முகநூல் என அனைத்துச் சமூக ஊடகத்திற்கும் எளிதில் பகிரலாம்.

2015ம் ஆண்டு சிறந்த குறுஞ் செயலிக்கான விருதினை மைக்ரோ சாப்ட் நிறுவனம் பெற்றுள்ளது. செய்தியாளர், ஊடகத்துறையினை சார்ந்தோர், எழுத்தாளர், கலைத்துறையை சார்ந்தவர்களுக்கு கருத்துகளை உள்ளது உள்ளபடி பகிர்ந்து கொள்ளவும் ஆவணங்களை இருந்த இடத்திலிருந்து பாதுகாக்கவும் இந்தச் செயலி நமக்குத் துணைபுரியும்.

https://play.google.com/store/apps/details?id=com.microsoft.office.officelens ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.